**ஆகஸ்ட் – 02**

# TNPSC துளிகள்

- இந்திய இராணுவமானது கிழக்கு சிக்கிமில், உயரமான சூழ்நிலைகளில் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான போர்க்கள விழிப்புணர்வு மற்றும் அடுத்த தலைமுறை போர்த் தொழில்நுட்பங்களைப் பரிசோதிப்பதற்காக திவ்ய திருஷ்டி பயிற்சியினை நடத்தியது.
- ஷைனிங் ஹோப் ஃபார் கம்யூனிட்டீஸ் (SHOFCO) நிறுவனர் டாக்டர் கென்னடி ஒடேட், கென்யாவில் உள்ள சமூகங்களுக்குத் தாக்கம் மிக்க சேவையினை வழங்கியதற்காக 2025 ஆம் ஆண்டு UN நெல்சன் மண்டேலா பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- ஐதராபாத்தில் உள்ள இரகசிய சேவை சார் புத்தொழில் நிறுவனமான ஸ்டார்டோர், லூகாஸ் எனப்படும் அதன் அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான சுற்றுப்பாதையில் கலங்களைப் பரிமாற்றுவதற்கான வாகனத்தினை இயக்குவதற்காக உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் உள்ளக ஹைட்ரஜன்-ஆக்ஸிஜன் உந்துவிசை இயந்திரத்தினை வெற்றிகரமாக சோதித்தது.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது, ஜம்முவில் உள்ள தினாநகர் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் உள்ள தாஜ்பூர் உட்பட மூன்று நிலையங்களில் புதிய மின்னணு அடிப்படையிலான நேரடி இயக்க ஒருங்கிணைந்த நிறுத்த (DDEI) அமைப்பை வெற்றி கரமாகப் பரிசோதனை செய்துள்ளது.
- சீன நாடானது, 2025 ஆம் ஆண்டு தொடங்கி, 3 வயதிற்குட்பட்ட ஒவ்வொரு குழந்தையின் பெற்றோருக்கு ஆண்டிற்கு 3,600 யுவான் (சுமார் 500 டாலர்) வழங்கும் புதிய மானியத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- 10 செ.மீ வரை உயரமுள்ள பார்படோஸ் நூல் பாம்பு (டெட்ராச்சிலோஸ்டோமா கார்லே), 2006 ஆம் ஆண்டிலிருந்து தென்படாத நிலையில் 2025 ஆம் ஆண்டில் மீண்டும் கண்டறியப் பட்டுள்ளது.
    - இது கண் பார்வையற்றது என்பதோடு நிலத்தடியில் வாழ்கின்ற எறும்புகள் மற்றும் கரையான்களை உண்ணுகின்ற இனமாகும்.


# தமிழ்நாடு செய்திகள்

## முதல் மாநகராட்சிப் பசுமைப் பத்திரம் - சென்னை

- சென்னைப் பெருநகர மாநகராட்சி மன்றம் ஆனது 205.64 கோடி ரூபாயினைத் திரட்ட தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி அளிக்கச் செய்வதற்காக அதன் முதல் பசுமை மாநகராட்சிப் பத்திரத்தை வெளியிட்டதன் மூலம் இது மேற்கொள்ளப்பட்டது.
- மே 22 ஆம் தேதியன்று தேசியப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட மாநகராட்சிப் பத்திரத்தை சென்னைப் பெருநகர மாநகராட்சி மன்றம் வெளியிட்டதாக தீர்மானம் கூறியது.
- அது ஆண்டிற்கு 7.97% வட்டி விகிதத்தில் 100 கோடி ரூபாய் அடிப்படை அளவிற்கு எதிராக 421 கோடி ரூபாய் திரட்டியது.
- பசுமைப் பத்திர வெளியீடு இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரிய (SEBI) விதிமுறைகளைப் பின்பற்றும் என்று சென்னைப் பெருநகர மாநகராட்சி மன்றம்

தெரிவித்துள்ளது.


- SEBI விதிமுறைகள் (வழிகாட்டல் குறிப்பு) ஆணையரை தலைவராகக் கொண்ட ஒரு பத்திர வெளியீட்டுக் குழுவை நிறுவ வேண்டும் என்று கோருகிறது.
- இந்தப் பத்திரம் பருவநிலைப் பத்திரங்கள் தரநிலை மற்றும் சான்றிதழ் திட்டம் மற்றும் சர்வதேச மூலதனச் சந்தை சங்கத்தினால் வெளியிடப்பட்ட பசுமைப் பத்திரக் கொள்கைகள் போன்ற சர்வதேசக் கட்டமைப்புகளுக்கு இணங்கும்.
- இது ஒரு 'பசுமைப் பத்திரம்' என்பதால், அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர மாநகராட்சி மன்றம் 20 கோடி ரூபாய் வரையில் ஊக்கத் தொகையாகப் பெறத் தகுதியுடையது.
- இந்தத் திட்டத்தின் கீழ் திரட்டப்படும் ஒவ்வொரு 100 கோடி ரூபாய்க்கும் அதிக பட்சமாக 20 கோடி ரூபாய் வரையில் 10 கோடி ரூபாய் ஊக்கத் தொகையைப் பெறவும் தகுதியுடையது.
- இந்தப் பத்திரத்திலிருந்து கிடைக்கும் வருமானம் கொடுங்கையூர் குப்பைக் கிடங்கில் உள்ள உயிரிச் சுரங்கத் திட்டத்திற்குப் பகுதி நிதியாகப் பயன்படுத்தப்படும்.
- இந்தப் பத்திரத்தின் மூலம் 205.64 கோடி ரூபாய் திரட்டப் பட்டது என்ற நிலையில் இதில் ஜெர்மனி நாட்டு வங்கியான KfW மூலம் 180 கோடி ரூபாய் திரட்டப் பட்டதுடன் அதில் சென்னைப் பெருநகர மாநகராட்சி மன்றத்தின் மொத்தப் பங்களிப்பு 385.64 கோடி ரூபாய் ஆகும்.




## மணிமாறன் - தமிழ் பனை ஓலை கையெழுத்துப் பிரதிகளின் நிகழ்காலப் பாரம்பரியம்

- பிரதமர் நரேந்திர மோடி தமிழ்நாட்டின் தஞ்சாவூரில் வசிக்கும் மணிமாறனின் கலைப் படைப்பினை சமீபத்தில் பாராட்டி உள்ளார்.
- தமிழ்ப் பனை ஓலை கையெழுத்துப் பிரதிகளைப் படிக்கும் பண்டையக் கலையைப் பாதுகாத்து கற்பிப்பதில் அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்காக இந்தப் புகழுரை வழங்கப் பட்டது.
- அவர் சரஸ்வதி மஹால் நூலகத்தின் தமிழ்ப் பண்டிதராக உள்ளார்.
- சரஸ்வதி மஹால் நூலகம் அவர் எழுதிய 20 புத்தகங்களை வெளியிட்டுள்ளது.
- செந்தலைக் கோயிலின் தனிவரைவு நூல் அல்லது ஒரு பொருள் பற்றிய நூல் (மோனோகிராஃப்) குறித்தும் அவர் ஆராய்ச்சி நடத்தி வருகிறார்.
- தமிழ்ச் சுவடியலை எவ்வாறு படித்துப் புரிந்து கொள்வது என்பதை மணிமாறன் மக்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்.

- இது பனை ஓலை கையெழுத்துப் பிரதிகள் பற்றியதாகும்.




## திருநர்களுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை 2025

- 2025 ஆம் ஆண்டு திருநர்களுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை என்பதை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.
- இந்து வாரிசுரிமைச் சட்டம் மற்றும் இந்திய வாரிசுரிமைச் சட்டம் ஆகியவற்றைத் திருத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று இந்தக் கொள்கை கூறியது.
- திருநர்கள் மற்றும் ஊடு பாலினத்தவர்களுக்கான வாரிசுரிமையை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- திருநர்கள் சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் மிகவும் பிற்படுத்தப் பட்டவர்களாகக் கருதப் படுவார்கள் என்றும், வீட்டு வசதித் திட்டங்களில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் இந்தக் கொள்கை கூறுகிறது.
- 2019 ஆம் ஆண்டு திருநர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தின் படி, அனைத்துக் கல்வி நிறுவனங்களும் திருநர்களின் கல்விச் சான்றிதழ்களில் பெயர் மற்றும் பாலினத்தை மாற்றுவதை அரசு உறுதி செய்யும்.
- பாலினத்துடன் ஒத்துப் போகாத நபர்களின் சிக்கல்களைத் தீர்க்க சிறார் நீதிச் சட்டம் மற்றும் பிற தொடர்புடைய சட்டங்களைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- பாலினம் தொடர்பான கேள்விகளுக்கு மாநில அரசு 24 மணி நேரமும் செயல்படும் ஒரு உதவி எண்ணை அரசு இயக்கும்.
- திருநர்களுக்கான நல நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாக உள்ளது.
- திருநர்கள் நல வாரியத்தை அமைப்பதில் இருந்து அவர்களுக்கு 'திருநங்கை மற்றும் திருநம்பி' என்ற கண்ணியமான பெயரிடலை வழங்குவது வரை இது தொடர்கிறது.
- தமிழ்நாட்டில் திருநங்கைகளுக்கான நாட்டின் முதல் நல வாரியம் ஏப்ரல் 15, 2008 அன்று திமுக அரசாங்கத்தின் கீழ் நிறுவப் பட்டது.
- ஏப்ரல் 15 ஆம் தேதி திருநங்கைகள் நல தினமாக தமிழ்நாட்டில் அனுசரிக்கப்படுகிறது.
- கல்லூரி விண்ணப்பப் படிவங்களில் ஆண் மற்றும் பெண்ணுடன் மூன்றாம் பாலின விருப்பத் தெரிவினை வழங்கிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- இங்கு ஒரே குறைபாடு என்னவென்றால், இக்கொள்கையில் திருநர்களுக்கான இட ஒதுக்கீடு பற்றி வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை.

- ஆனாலும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் அவர்களின் பொருத்தமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய இம்மாநிலம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று இக்கொள்கை கூறியுள்ளது.
- தற்போது, திருநர்களுக்கு மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் (MBC) என்பதின் கீழ் இடஒதுக்கீடு வழங்கப் படுகிறது.
- ஆனால் கர்நாடக மாநில அரசு அவர்களுக்கென பிரத்தியேகமாக 1% இடஒதுக்கீட்டை வழங்குகிறது.




சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் வடிவமைக்கப்பட்ட "தமிழ்நாடு மாநில திருநங்கையர் கொள்கை 2025"-ஐ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.

# தேசியச் செய்திகள்

## வீர் பரிவார் சஹாயத யோஜனா 2025




- தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (NALSA) ஆனது வீரர்கள், மூத்த/முன்னாள் வீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களை ஆதரிப்பதற்காக வேண்டி இந்தத் திட்டத்தைத் தொடங்கியது.

- ❖ இந்தத் திட்டமானது இராணுவம் மற்றும் துணை இராணுவப் பணியாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப இலவச சட்ட உதவி, ஆலோசனை மற்றும் பெரும் ஆதரவை வழங்குகிறது.
- ❖ சேவைகளில் இணைய வழி விண்ணப்பத் தாக்கல், ஒளிப்பட இணைப்பு மூலமான ஆலோசனைகள், இணைய வழி லோக் அதாலத்கள் மற்றும் இயங்கலை வழி நடுவம் ஆகியவை அடங்கும்.
- ❖ இது சம நீதி மற்றும் சட்ட உதவியை உறுதி செய்கின்ற அரசியலமைப்பின் 39Aவது சரத்தினை அடிப்படையாகக் கொண்டது.
- ❖ NALSA என்பது 1987 ஆம் ஆண்டு சட்டச் சேவைகள் அதிகாரிகள் சட்டத்தின் கீழ் 1995 ஆம் ஆண்டில் நிறுவப் பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.

## அறிவியல் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் (SPoCS)





- ❖ SPoCS என்பது அறிவியல் மனப்பான்மை மற்றும் விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக இந்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முதன்மைத் திட்டமாகும்.
- ❖ இந்தத் திட்டமானது அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பான தேசிய அறிவியல் அருங்காட்சியக சபை (NCSM) மூலம் செயல்படுத்தப்பட்டது.
- ❖ 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் நிலவரப்படி, இந்தத் திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் 27 அறிவியல் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- ❖ வடகிழக்கு மாநிலங்களில் உள்ள மையங்கள் இந்த அமைச்சகத்திடமிருந்து சுமார் 90% நிதியைப் பெறுகின்றன என்பதோடு மேலும் அவை ஷில்லாங், திமாபூர், காங்டாக் மற்றும் ஐஸ்வால் போன்ற நகரங்களில் அமைந்துள்ளன.
- ❖ உள்ளடக்கத் தன்மையினை ஊக்குவிப்பதற்காக 5 லட்சத்திற்கும் குறைவான மக்கள்

தொகை கொண்ட பகுதிகளில் மூன்றாம் வகை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## மூன்றாவது தன்னார்வ தேசிய மதிப்பாய்வு

- நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் உயர் மட்ட அரசியல் மன்றத்தில் (UN HLPF) இந்தியா தனது மூன்றாவது தன்னார்வ தேசிய மதிப்பாய்வை (VNR) வழங்கியது.
- 2030 ஆம் ஆண்டு செயல்பாட்டு நிரலுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை இந்த மதிப்பாய்வு மீண்டும் உறுதிப்படுத்தியது.
- 2015 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சுமார் 248 மில்லியன் மக்கள் பல பரிமாண வறுமை நிலையிலிருந்து மீட்கப்பட்டனர்.
- கோவிட்-19 பெருந்தொற்று காலத்திலும் அதற்குப் பிறகும் பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனாவின் கீழ் 800 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இலவச உணவு தானியங்களைப் பெற்றனர்.
- 2024 ஆம் ஆண்டு நிலவரப்படி, ஆயுஷ்மான் பாரத் திட்டம் 55 கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு சுகாதாரப் பாதுகாப்பை வழங்கியது.
- போஷான் அபியான் திட்டத்தின் பலன் 2024 ஆம் ஆண்டிற்குள் 10 கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளைச் சென்றடைந்தது.
- PM-KUSUM மற்றும் தேசிய பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி திட்டம் போன்ற திட்டங்களால் ஆதரிக்கப்படும் இந்தியாவின் தூய்மையான எரிசக்தி திறன் 2025 ஆம் ஆண்டில் 180 GW அளவைத் தாண்டியது.
- 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி உலகளவில் 3வது பெரிய புத்தொழில் சூழல் அமைப்பாக இந்தியா உள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்குள் ஜன் தன் திட்டத்தின் கீழ் 50 கோடிக்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டன, இதன் மூலம் JAM (ஜன் தன்–ஆதார்–மொபைல்) பரவல் சாத்தியமாகியது.




## மாசுபட்ட இடங்களின் மேலாண்மைக்கான புதிய விதிகள் 2025

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC), 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு (மாசுபட்ட தளங்களின் மேலாண்மை) விதிகளை அறிவித்தது.
- கதிரியக்கம், சுரங்கம், எண்ணெய் கசிவு மற்றும் திடக்கழிவு பாதிப்புகளைத் தவிர்த்து, 2016 ஆம் ஆண்டு அபாயகரமான மற்றும் பிற கழிவுகள் விதிகளின் கீழ் பட்டியலிடப் பட்டுள்ள 189 அபாயகரமான பொருட்களை இந்த விதிகள் உள்ளடக்குகின்றன.

- உள்ளாட்சி அமைப்புகள் சந்தேகத்திற்குரிய இடங்கள் குறித்து ஆண்டிற்கு இரண்டு முறை புகாரளிக்க வேண்டும்; மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்கள் (SPCBs) அப் பகுதியினை மதிப்பீடு செய்து அதனை மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் (CPCB) தெரிவிக்க வேண்டும்.
- மாசுபடுத்தும் அமைப்புகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களைப் பயன்படுத்தி அப்பகுதியினை சுத்தம் செய்வதற்கு நிதியளிக்க வேண்டும்; மாசுபடுத்தும் அமைப்புகளைக் கண்டறிய முடியவில்லை என்றால், SPCB வாரியங்கள் அதனைச் செயல்படுத்தும், அரசாங்கங்கள் அதற்கான நிதியினை அளிக்கலாம்.
- மாசுபடுத்தும் அமைப்புகள் 3 மாதங்களுக்குள் அதற்கான செலவுகளைத் திருப்பிச் செலுத்த வேண்டும்; புதிய நில உரிமையாளர்களும் அதற்கான பொறுப்பினைக் கொண்டிருப்பர்.




## சர்வதேசச் செய்திகள்

### ஜீலாங் ஒப்பந்தம்





- ஆஸ்திரேலியா மற்றும் ஐக்கியப் பேரரசும் ஜீலாங் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

- இது விக்டோரியாவின் ஜீலாங்கில் உள்ள AUKUS ஒப்பந்தத்தின் முதல் தூணின் கீழான 50 ஆண்டு காலப் பாதுகாப்பு ஒப்பந்தமாகும்.
- இது SSN-AUKUS அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களின் வடிவமைப்பு, கட்டுமானம், செயல்பாடு, பராமரிப்பு மற்றும் அகற்றல் ஆகியவற்றில் ஆழமான ஒத்துழைப்பைச் செயல்படுத்துகிறது.
- இந்த ஒப்பந்தமானது, ஐக்கியப் பேரரசு மற்றும் ஆஸ்திரேலியா இடையேயான இரு தரப்புப் பாதுகாப்பு உறவுகளுக்கான நீண்ட கால உறுதிப்பாட்டைக் குறிக்கிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## கூட்டுறவு வங்கி விரிவாக்கத்திற்கான புதிய விதிமுறைகள்




- தற்போதுள்ள நிதி ரீதியாக வலுவான மற்றும் நன்கு நிர்வகிக்கப்பட்ட (FSWM) விதிகளை மாற்றுவதற்காக வணிக அங்கீகாரத்திற்கான தகுதி அளவுருக்களை (ECBA) இந்திய ரிசர்வ் வங்கி முன்மொழிந்துள்ளது.
- நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளின் (UCB) புதிய கிளைகள், ATM மற்றும் அதன் உள்கட்டமைப்புக்கான ஒப்புதல்களை ECBA நிர்வகிக்கும்.
- வங்கிகள் கடந்த இரண்டு நிதி ஆண்டுகளில் இருந்த போதுமான மூலதனத் தன்மை, வங்கி இருப்பு / சொத்துத் தரம் மற்றும் இலாபத்தைக் காட்டுவதற்கான பல்வேறு விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
- வங்கிகளின் நிகர வாராக் கடன்கள் (NPA) மூன்று சதவீதத்தை தாண்டக் கூடாது.
- வங்கிகள் தேவையான பண கையிருப்பு விகிதம் (CRR) மற்றும் சட்டப்பூர்வ பணப் புழக்க விகிதம் (SLR) ஆகியவற்றைத் தவறாமல் பேணியிருக்க வேண்டும்.
- ECBA செல்லுபடியாகும் காலம் அடுத்த நிதியாண்டின் செப்டம்பர் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப்படும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## காசாப் மற்றும் ஹயாலெட் குண்டுகள்

- துருக்கியின் காசாப் என்பது மிக நிலையான MK-ரக குண்டுகளை விட மூன்று மடங்கு


வலிமையானது மற்றும் ஒரு சதுர மீட்டருக்கு 10.16 துண்டுகளைச் சிதறடிக்கும் 970 கிலோ (2,000 பவுண்டு) எடையுள்ள குண்டு ஆகும்.

- ஹயாலெட் என்பது கான்கிரீட் மற்றும் எஃகு போன்ற கடினமான மேற்பரப்புகளில் 90 மீட்டர் வரை ஊடுருவக்கூடிய ஒரு பதுங்கு குழி வெடிகுண்டு ஆகும்.
- காசாப் எதிர்கால ஆளில்லா விமானப் பயன்பாட்டிற்காக திட்டமிடப்பட்டுள்ளதுடன், இரண்டு குண்டுகளும் துருக்கியின் F-16 மற்றும் F-4 போர் விமானங்களிலிருந்து ஏவப் படக் கூடியது.




## சுற்றுச்சூழல் செய்திகள்


### உலகின் மூன்றாவது மிக அதிக புலிகளின் எண்ணிக்கை பரவல் 2025




- அசாமில் உள்ள காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் சரணாலயம் (KNPTR) 100 சதுர கி.மீ.க்கு 18.65 புலிகளுடன் தற்போது 148 புலிகளைக் கொண்டுள்ளதுடன் இது உலகளவில் மூன்றாவது மிக உயர்ந்த புலிகளின் எண்ணிக்கையை கொண்டுள்ளதாக அமைகிறது.
- புதுப்பிக்கப்பட்ட புலிகள் கணக்கெடுப்பு, 2024 ஆம் ஆண்டு காசிரங்காவில் புலிகளின் நிலை அறிக்கையில் வெளியிடப்பட்டது.
- புலிகளின் எண்ணிக்கைப் பரவல் தரவரிசையில் காசிரங்காவைத் தொடர்ந்து

கர்நாடகாவின் பந்திப்பூர் (19.83) மற்றும் உத்தரகாண்டின் கார்பெட் (19.56) ஆகியவை உள்ளன.

## அமுர் புலி




- அமுர் புலி அல்லது சைபீரியன் புலி, ரஷ்யாவின் தொலைதூரக் கிழக்கில் உள்ள உடேஜ், நானாய் மற்றும் ஓரோச் போன்ற பழங்குடியினக் குழுக்களால் ஓர் ஆன்மீக உயிரினமாக மதிக்கப்படுகிறது.
- 'அம்பா' என்று அழைக்கப்படும் இந்தப் புலிகள், ஷாமனிக் சடங்குகள் மற்றும் வேட்டை சார்ந்த நம்பிக்கைகளுக்கு மையமான டைகா டைகா பழங்குடியினரின் உறவாகவும் எஜமானராகவும் பார்க்கப்படுகிறது.
- புலியைக் கொல்வது தடை செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது; அது இறந்தால், அது சாக்தமா எனப்படும் புனித மரக் கூடுகளில் முழுமையான சடங்குகளுடன் புதைக்கப் படுகிறது.
- சில பழங்குடியினர்கள் புலி-மனித திருமணங்களையும் ஆன்மீகப் பயணங்களுக்காக ஷாமன்கள் புலிகளாக உருவெடுப்பதையும் நம்புகிறார்கள்.
- புலி சுற்றுச்சூழலுக்கு அப்பாற்பட்ட கலாச்சார மற்றும் ஆன்மீக முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது என்பதோடு இது டைகா இனச் சமூகங்களின் அடையாளம் மற்றும் மரபுகளைக் குறிக்கிறது.

## அசாமின் ஹர்கிலா இராணுவ வளங்காப்பு மாதிரி

- அருகி வரும் நாரைகளைப் பாதுகாப்பதற்காக வேண்டி அசாமின் ஹர்கிலா இராணுவ மாதிரியின் கீழ் இருபது கம்போடியப் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- கம்போடியாவின் டோன்லே சாப் உயிர்க்கோளக் காப்பகத்தின் ஒரு பகுதியான பட்டாம்பாங் மாகாணத்தில் உள்ள பிரேக் டோல் பறவைகள் சரணாலயத்தில் இந்தப் பயிற்சி நடைபெறுகிறது.
- இந்தப் பயிற்சியை UNEP சாம்பியன் ஆஃப் எர்த் மற்றும் ஆரண்யக்கில் உள்ள வன விலங்கு உயிரியலாளர் பூர்ணிமா தேவி பர்மன் வழிநடத்துகிறார்.
- ஹர்கிலா இராணுவம் என்பது அசாமில் அருகி வரும் பெரிய சிப்பாய் நாரையைக் பாதுகாப்பதற்கு உதவிய பெண்கள் தலைமையிலான பாதுகாப்பு இயக்கமாகும்.

❖ இந்தப் பெரும் முன்னெடுப்பு ஆனது பெண்களின் அதிகாரமளித்தல் மற்றும் சமூகம் தலைமையிலான சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு ஆகியவற்றை வலியுறுத்துகிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## UN SOFI 2025 அறிக்கை

❖ 2025 ஆம் ஆண்டு உலகில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை (SOFI) அறிக்கையானது ஐக்கிய நாடுகளின் பின்வரும் ஐந்து நிறுவனங்களால் வெளியிடப் படுகிறது:
   - உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO),
   - சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதி (IFAD),
   - ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (UNICEF),
   - உலக உணவுத் திட்டம் (WFP), மற்றும்
   - உலக சுகாதார அமைப்பு (WHO).


❖ இந்த அறிக்கையானது நிலையான மேம்பாட்டு இலக்குகளின் இரண்டாவது இலக்கின் (SDG 2) முன்னேற்றத்தைக் கண்காணிக்கிறது.

❖ SDG 2 என்பது பட்டினி நிலையை முடிவுக்குக் கொண்டு வருதல், ஆண்டு முழுவதும் பாதுகாப்பான, சத்தான மற்றும் போதுமான உணவுக் கிடைப்பதை உறுதி செய்தல் மற்றும் அனைத்து வகையான ஊட்டச்சத்து குறைபாட்டையும் நீக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இந்தியாவில், 2024 ஆம் ஆண்டில் 55.6% மக்களால் ஆரோக்கியமான உணவை வாங்க முடியவில்லை என்று அறிக்கை கூறுகிறது.

❖ உலகளவில், 2024 ஆம் ஆண்டில் சுமார் 720 மில்லியன் மக்கள் அதாவது மக்கள் தொகையில் சுமார் 8.2% பேர் பட்டினி நிலையால் பாதிக்கப்பட்டனர்.

- 2024 ஆம் ஆண்டில் சுமார் 2.3 பில்லியன் மக்கள் மிதமான அல்லது கடுமையான உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டனர்.
- ஆசியாவில் 323 மில்லியன் என்ற அளவில் அதிக எண்ணிக்கையிலான ஊட்டச்சத்து குறைபாடுள்ள மக்கள் இருந்தனர்.
- அதனையடுத்து 307 மில்லியன் ஊட்டச்சத்து குறைபாடுள்ள மக்களுடன் ஆப்பிரிக்கா இடம் பெற்றது.
- இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் 34 மில்லியன் ஊட்டச்சத்து குறைபாடுள்ள மக்கள் இருந்தனர்.
- ஆப்பிரிக்காவில் 5 பேரில் 1 பேருக்கும் அதிகமானோர் 2024 ஆம் ஆண்டில் நாள்பட்ட பட்டினி நிலையை எதிர்கொண்டனர்.
- ஆசியாவின் மக்கள்தொகையில் சுமார் பாதி பேர் உணவுப் பாதுகாப்பின்மையில் வாழ்ந்தனர். ஆனால் உணவுப் பாதுகாப்பின்மை விகிதங்கள் ஆப்பிரிக்காவில் மிகவும் அதிகமாக இருந்தன.
- 2030 ஆம் ஆண்டில், 512 மில்லியன் மக்கள் (உலக மக்கள்தொகையில் 6%) இன்னும் நாள்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுடன் இருக்கலாம் என்று இந்தக் கணிப்புகள் மதிப்பிடுகின்றன.
- 2030 ஆம் ஆண்டில், ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள மக்களில் 60% பேர் ஆப்பிரிக்காவில் வாழ்வார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அந்நாட்டின் மக்கள் தொகையில் 17.6% பேர் நாள்பட்ட பட்டினி நிலையை எதிர்கொள்வார்கள்.
- ஆசியா மற்றும் இலத்தீன் அமெரிக்கா/கரீபியன் நாடுகளில், ஊட்டச்சத்துக் குறைபாடு ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் 5 சதவீதத்திற்கும் குறைவாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# மாநிலச் செய்திகள்

## வாக்கெடுப்பு இல்லாத பாரம்பரியம்

- கதமன் கிராமம் குஜராத்தின் பனஸ்கந்தா மாவட்டத்தின் பலன்பூர் தாலுக்காவில் அமைந்துள்ளது.
- இந்த கிராமத்தில் 1955 ஆம் ஆண்டு முதல் கிராமப் பஞ்சாயத்து தேர்தல் நடத்தப் பட வில்லை.

- இந்து மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான பரஸ்பர ஒப்பந்தத்தின் மூலம் கிராமத்தின் தலைமை தேர்ந்தெடுக்கப்படுகிறது.
- அந்தக் கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 7,000 என்பதோடு அங்கு சுமார் 4,600 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் ஆகும்.
- இந்து மற்றும் முஸ்லிம் குடியிருப்பாளர்கள் ஒவ்வொரு காலாண்டிலும் சர்பாஞ்ச் மற்றும் துணை சர்பாஞ்ச் பதவிகளை மாற்றுகிறார்கள்.
- 2025 ஆம் ஆண்டில், சர்பாஞ்ச் பதவியானது அதிகாரப்பூர்வச் சுழற்சிக் கொள்கையின் கீழ் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது.
- கதமன் ஒருமித்த அடிப்படையிலான பஞ்சாயத்து (சாம்ராஸ்) ஆக தகுதி பெறுகிறது என்றாலும் சாம்ராஸ் கிராம் யோஜனா மானியம் எதுவும் பெறவில்லை.
- சாம்ராஸ் கிராம் யோஜனா என்பது அம்மாநிலத்தின் முன்னாள் முதல்வர் நரேந்திர மோடியின் கீழ் தொடங்கப்பட்ட குஜராத் மாநில அரசின் திட்டமாகும் என்பதோடு இது போட்டியற்றப் பஞ்சாயத்து தேர்வுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், குஜராத்தில் 4,564 கிராமப் பஞ்சாயத்துகளில் தேர்தல்கள் நடத்தப்பட்டன என்பதோடு அவற்றில் 761 பஞ்சாயத்துகள் சாம்ராஸ் பஞ்சாயத்துகளாக அறிவிக்கப்பட்டன.
- சாம்ராஸ் பஞ்சாயத்துகள் சுமார் 3 லட்சம் ரூபாய் முதல் 13 லட்சம் ரூபாய் வரை மானியங்களுக்குத் தகுதியுடையவை.
- பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சார்ந்த குடியிருப்பாளர்கள் அங்கு இல்லாத போதிலும், ஓர் இட ஒதுக்கீடு செய்யப்பட்ட பட்டியலிடப்பட்ட பழங்குடி (ST) மன்றம் / வார்டு காரணமாக கதாமன் தகுதி நீக்கம் செய்யப்பட்டது.
- ST இட ஒதுக்கீடு என்பது அக்கிராமத்தில் தற்காலிகமாகப் பதிவு செய்யப்பட்ட ஓர் அரசு அதிகாரியின் கடந்த காலப் பதிவிலிருந்து உள்ளது.
- வெளிப்புற ஊக்கத் தொகைகள் இல்லாமல் அந்தச் சமூகம் அதன் 70 ஆண்டு கால ஜன நாயக ஒருமித்த மாதிரியை தொடர்ந்து நிலை நிறுத்தி வருகிறது.




# இதரச் செய்திகள்

## கவ்ரி விழா

- கவ்ரி விழா என்பது இராஜஸ்தானில் உள்ள மேவாரின் பில் மக்களின் 40 நாட்கள் அளவிலான சடங்காகும்.

- இது இரக்சா பந்தனுக்குப் பிறகு கோர்க்கிய மாதாவை (பார்வதி தேவி) கௌரவிப்பதற்காக நடத்தப்படுகிறது.
- பில் குழுக்கள் கிராமம் கிராமமாக நடன நாடகங்கள் (கேல்கள்), பாடல்கள் மற்றும் இயற்கை, எதிர்ப்புத் திறன் மற்றும் சமூக மதிப்புகளில் நன்கு வேரூன்றிய ஆன்மீகச் சடங்குகளை நிகழ்த்துகின்றன.
- 'பட்லியா ஹிந்த்வா' மற்றும் 'பிலுரானா' போன்ற நாடகங்கள் சுற்றுச்சூழல் சார் பக்தி மற்றும் படையெடுப்பாளர்களுக்கு எதிரான வரலாற்று எதிர்ப்பைச் சித்தரிக்கின்றன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★